
RECEPTION
JJC
PUDUKKOTTAI

## பாரதிதாசன் பல்கலைக்கழக ஆண்கள் கூடைப்பந்தாட்டப் போட்டி

## புதுக்கோட்டை ஜெ.ஜெ. கல்லூரிக்கு சிறப்பிடம்

பாரதிதாசன் பல்கலைக்கழக அளவிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள், புதுக்கோட்டை ஸ்ரீவாஞ்சி கலை அறிவியல் கல்லூரியில் 16, 17.09.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. அதில் பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுமைக்குட்பட்ட கல்லூரி அணியினர் கலந்து கொண்டனர். நாக்கவுட் மற்றும் லீக் முறையில் நடைபெற்றது. இதில் திருச்சி செயின் ஜோசப் அணியில் முதலிடத்தையும் இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தை பிஷப் ஹீபர் மற்றும் ஜமால் முகமது கல்லூரி அணியினரும் முறையே நான்காம் இடத்தை புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி பெற்றது. அதில் சிறந்த விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு தென்னிந்திய பல்கலைக்கழக அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. போட்டியில் வெற்றிபெற்ற அணியினரை கல்லூரி செயலர் திரு.நா.சுப்பிரமணியன், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன், முதல்வர் முனைவர் ஐ.பரசுராமன் மற்றும் உடற்கல்வித்துறைத் தலைவர் முனைவர் கே.ஜெகதீஸ் பாபு ஆகியோர் பாராட்டினர்.

**தொடர்புக்கு:**

**முனைவர் K.ஜெகதீஸ் பாபு**
**தலைவர்,உடற்கல்வித் துறை**
**செல். 9965207874**